# வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம்

## தரம் - 5

## பயிற்சி வினாத்தாள் – 11


- தயாரிப்பு : திரு.ம.முரளிதரன் (ஆசிரிய ஆலோசகர்)
- வழிப்படுத்தல் : திரு.இரவிச்செல்வன் (உதவிக்கல்விப்பணிப்பாளர்)

(வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு)


**11**

## வினாத்தாள் - 1

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்: ...........................

**பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.


**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
| --- | --- |
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
| --- | --- |
| **முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.** | ................................ **பெயர்** ................................ **ஒப்பம்** |
| **இரண்டாவது பரீட்சகர் (..............................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.** | ................................ **பெயர்** ................................ **ஒப்பம்** |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீடு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.** | ................................ **பெயர்** ................................ **ஒப்பம்** |
| **அதிபர் மேற்பார்வை செய்தேன்** | |
| **வலய / மாகாண மேற்பார்வையாளர்** | |


**விடுபட்ட பகுதியைப் பூரணப்படுத்துக**

1.



(1) (2) (3)

2. பின்வரும் உரு பற்றிய பிழையான கூற்று




(1) மேசையைச் சுற்றி 05 கதிரைகள் காணப்படுகின்றன.

(2) மேசையின் மீது 03 பூச் சாடிகள் காணப்படுகின்றன.

(3) அலங்கார மின்குமிழ் ஒன்று மேலே பொருத்தப்பட்டுள்ளது.


3. A, B ஆகிய படங்களுக்கிடையே காணப்படும் வித்தியாசங்கள் எத்தனை?




(1) மூன்றிலும் குறைவான வித்தியாசங்கள் காணப்படுகின்றன.
(2) மூன்று வித்தியாசங்கள் மட்டும் காணப்படுகின்றன.
(3) மூன்றிலும் அதிகமான வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

**4ஆம், 5ஆம் வினாக்களில் உள்ள உருக்களுக்கு இடையேயான எண் தொடர்பை அவதானித்து புள்ளிக் கோட்டில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க?**

4.





(1) 8 (2) 12 (3) 6

5.

| | | | | |
|---|---|---|---|---|
| 101 | 97 | 93 | 89 | 85 |
| 65 | 69 | ...... | 77 | 81 |
| 61 | 57 | 53 | 49 | 45 |
| 25 | 29 | 33 | 37 | 41 |

(1) 73 (2) 75 (3) 85

கீழே உள்ள சதுரமுகிக்கு படத்தில் காட்டியது போன்று எல்லா உச்சிகளிலும் உள்ள பகுதிகளுக்கு நிறந்தீட்டிய பின்னர் கோடுகள் வழியே வெட்டி சிறிய சதுரமுகிக் குற்றிகள் பெறப்பட்டது எனக் கொண்டு 6ஆம், 7ஆம் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.



6. ஒரு பக்கமும் நிறம் பூசப்படாத குற்றிகள் எத்தனை?

(1) 19 (2) 01 (2) 24

7. இரண்டு பக்கங்கள் நிறந்தீட்டப்பட்ட குற்றிகள் எத்தனை?

(1) 12 (2) 08 (3) இல்லை

| | | |
|---|---|---|
| தாவர உண்ணி | மாமிச உண்ணி | A |
| முயல் | சிங்கம் | காகம் |
| B | நரி | நாய் |

8. A, B ஆகியவை முறையே குறிப்பது

(1) அனைத்துமுண்ணி, மான் (2) பூனை, மான் (3) மான், அனைத்துமுண்ணி

| | | |
|---|---|---|
| B | கடல் | வான் |
| புகையிரதம் | கப்பல் | A |
| மகிழுந்து | வள்ளம் | உலங்குவானூர்தி |

9. A, B ஆகியவை முறையே குறிப்பது

(1) தரை, விமானம் (2) கார், விமானம் (3) விமானம், தரை


10. ஒரு வீட்டின் வாசலில் ஆண் மாணவர்கள் அணியும் இரண்டு சோடி சப்பாத்துக்களும் மாணவிகள் அணியும் 3 சோடி சப்பாத்துக்களும் காணப்பட்டன எனின்


(1) இவ் வீட்டில் 5 மாணவர்கள் உள்ளனர்

(2) இவ் வீட்டில் 2 ஆண் மாணவர்களும் 3 பெண் மாணவிகளும் உள்ளனர்

(3) எத்தனைபேர் உள்ளனர் என சரியாக கூற முடியாது

11. கீழ்வரும் உருவங்கள் இரண்டையும் ஒன்றன்மேல் ஒன்றை வைக்கும் போது தோன்றும் வடிவம் எது?





(1) (2) (3)


12. ஒன்று தொடக்கம் 10 வரையான எண்களைக் கூட்டும் போது கிடைக்கும் விடை.

(1) 11 (2) 55 (3) 110

13. என்னிடம் ரூபாய் 5, 10 ஆகிய குற்றிகள் மட்டும் உள்ளடக்கி ரூபாய் 90 உள்ளது. அவற்றில் ரூபாய் 30 பெறுமதியானவை 5 ரூபாய் குற்றிகள் எனின் என்னிடமுள்ள ரூபாய் 10 குற்றிகள் எத்தனை?

(1) 10 (2) 6 (3) 5

**கீழ்வரும் படத்தை அவதானித்து 14 ஆம், 15 ஆம் வினாக்களுக்கு விடை தருக?**




14. A என்று எழுதி உள்ள தட்டில் வரவேண்டியது?

(1) □□ (2) △△ (3) □△△

15. △△ இற்குச் சமனாக இருக்கக்கூடியது?

(1) ○○ (2) ☆ (3) □

16. boog yroV இவ் எழுத்துக்கூட்டம் கண்ணாடியில் தெரிந்தது எனின் இது உண்மையில் எவ்வாறு எழுதப்பட்டிருக்கும்?

(1) Very good (2) good very (3) doog yrev

17. தற்போது எனது வயதின் அரைப்பங்கு எனது தம்பியின் வயதாகும். அப்போது இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை 12 ஆகும் எனின் தம்பிக்கு எத்தனை வயதாக இருந்தபோது அவனது வயதின் மூன்று மடங்காக எனது வயது இருந்திருக்கும்.

(1) 4 (2) 6 (3) 2

**காலை வேளையில் ஒருவர் தனது நிழலைப் பின்தொடர்ந்து 100m சென்று பின் தனது வலதுகைப் பக்கம் திரும்பி 150m சென்று பின் அவரை நிழல் பின்தொடரும்படியாக 100m சென்று பாடசாலையை அடைந்தார் எனக் கொண்டு 18ஆம், 19ஆம் வினாக்களுக்கு விடை தருக**

18. அவர் முதலாவதாகவும், இறுதியாகவும் பயணித்த திசைகள் எவை?
    (1) கிழக்கு, மேற்கு (2) மேற்கு, கிழக்கு (3) வடக்கு, தெற்கு

19. அவர் வீட்டிலிருந்து பாடசாலை சென்றுவர உள்ள தூரம் எவ்வளவு?
    (1) 350m (2) 700m (3) 250m

20. ஒரு QR குறியீட்டிற்கு 4 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டது ஒரு லீற்றர் பெற்றோலின் விலை ரூபாய் 370 எனின் ஒரு QR குறியீட்டிற்கான பெற்றோலைப் பெற்றுக்கொண்ட பின் ரூபாய் 1500 ஐச் செலுத்தும் ஒருவருக்கு மீதியாகக் கிடைக்கும் பெறுமதி கூடிய குற்றிக்காசு எவ்வளவு?

    (1) ரூபாய் 20 (2) ரூபாய் 5 (3) ரூபாய் 10

21. அஸ்வின் 1 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரை அன்று என்ன திகதியோ அத் திகதிக்குரிய பணத்தை உண்டியலில் சேர்த்தார் எனின் 20 ஆம் திகதி உண்டியலில் உள்ள பணம் எவ்வளவு?

    (1) ரூபாய் 165 (2) ரூபாய் 210 (3) ரூபாய் 20

22. கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக 10 பேர் வரிசையில் நின்று செங்கற்களை பரிமாறுகின்றனர். ஒருவரிடம் இருந்து மற்றவரிடம் கல்லைப் பரிமாற்ற 3 செக்கன் எடுத்தது எனின் முதலாவது ஆளிடம் இருந்து 10 ஆவது ஆளிடம் கல் சென்றடைய எடுக்கும் நேரம் யாது?


    (1) 30 செக்கன் (2) 33 செக்கன் (3) 27 செக்கன்

23. 10m நீளமான மூன்று கம்பித்துண்டுகள் ஒவ்வொன்றும் 2m நீளம் கொண்ட துண்டுகளாக வெட்டப்பட்டது. ஒரு துண்டை வெட்டுவதற்கு ரூபாய் 9 செலவிடப்பட்டது எனின் மூன்று கம்பிகளையும் வெட்ட செலவாகும் மொத்தப்பணம் எவ்வளவு?

    (1) ரூபாய் 90 (2) ரூபாய் 108 (3) ரூபாய் 72

**கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 24 ஆம், 25ஆம் வினாக்களுக்கு விடை தருக**

**மு.ப. 11 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட கடுகதிப் புகையிரதம் ஒன்று மணிக்கு 60km என்ற மாறா வேகத்தில் குருநாகல் ஊடாக அநுராதபுரத்தை அடைந்த பாதை மேலே காட்டப்பட்டுள்ளது.**




24. இப்புகையிரதம் மாகோவைச் சென்றடைந்த நேரம் யாது?
    (1) 2 மணித்தியாலம் 30 நிமிடம் (2) மு.ப. 1.30 (3) பி.ப. 1.30

25. இப் புகையிரதம் மாகோவில் இருந்து அநுராதபுரத்தைச் சென்றடைய எடுக்கும் நேரம் எவ்வளவு?
    (1) 45 நிமிடங்கள் (2) பி.ப. 2.15 (3) 1 மணித்தியாலம்


26. மின்குமிழ் ஒன்றின் மூலம் தோன்றும் நிழல் தொடர்பான சரியான கூற்று எது?

(1) காலை வேளையில் எப்போதும் மேற்குத் திசையில் நிழல் விழும்


(2) நிழல் விழும் திசையானது எப்போதும் மாறாது

(3) மின்குமிழ் மற்றும் பொருள் இருக்கும் இடம் தெரியாமல் கூற முடியாது


27. பாடசாலை, தரம் 5A, தரம் 5B என்பவற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டும் சரியான விடை.



(1)



(2)



(3)

28. பேருந்து ஒன்று 2 லீற்றர் பெற்றோலில் 40Km தூரம் செல்லும். 20 லீற்றர் பெற்றோலை நிரப்பிக்கொண்டு 300Km சென்றுள்ள பேருந்தானது இன்னும் எவ்வளவு தூரம் செல்லும்?

(1) 400Km (2) 100Km (3) 700Km

**கிழக்கு நோக்கி நிற்கும் 15 பேர் கொண்ட வரிசை ஒன்றில் பரன் முன்னாலிருந்து 5 ஆவதாகவும் தரன் வரிசையின் நடுவிலும் உள்ளனர். தற்போது வரிசையில் உள்ள எல்லோரும் தாம் இருந்த இடத்திலேயே மேற்கு நோக்கித் திரும்பியுள்ளனர் எனக் கொண்டு 29, 30 ஆம் வினாக்களுக்கு விடை தருக?**


29. தற்போது தரன் வரிசையில் எத்தனையாவதாக உள்ளார்?

(1) 15 (2) 7 (3) 8


30. தற்போது பரன் பின்னாலிருந்து எத்தனையாவதாக உள்ளார்?

(1) 5 (2) 10 (3) 11


31.




சதுரவடிவக் கடதாசி படத்தில் காட்டியவாறு புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கப்பட்ட பின் துளையிடப்பட்ட விதம் மேலே காட்டப்பட்டுள்ளது. இதனை விரிக்கும் போது தோன்றும் வடிவம் எது?



(1)




(2)



(3)

32. கீழ்வரும் உரு தொடர்பான பிழையான கூற்று




(1) இவ் உருவில் காணப்படும் செங்கோணங்களினது எண்ணிக்கையினது அரைப் பங்காக உருவின் உள்ளே காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை உள்ளது.


(2) இவ் உருவில் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கையும் செங்கோணத்தை விடச் சிறிய கோணங்களின் எண்ணிக்கையும் சமனாகும்.

(3) இவ் உருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கையை விட செங்கோணத்தை விட பெரிய கோணங்களின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளது.

33.




அருகிலே மூன்று கனக்குற்றிகள் அடுக்கப்பட்ட விதம் காட்டப்பட்டுள்ளது. அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும் போது தோன்றும் விதம் யாது?




(1)




(2)



(3)




**அருகில் உள்ள சதுரமுகியில்** i, ii, iii, iv, v, vi **ஆகிய உரோமன் இலக்கங்கள் பதிக்கப்பட்டுள்ளது**

34. i இற்கு எதிரான பக்கமாக வரக்கூடியது

(1) iv (2) iii (3) v


35. iv இற்கு எதிராக நிச்சயமாக வர முடியாதது

(1) vi (2) ii (3) vi, ii ஆகிய இரண்டும்

36. வட்ட வடிவில் சில மாணவர்கள் நிற்கின்றனர். அவர்களுக்கு பச்சை, மஞ்சள், சிவப்பு, நீலம் என்ற ஒழுங்கில் எல்லா நிறங்களிலும் சம எண்ணிக்கையான கொடிகள் வழங்கப்பட்டுள்ளது எனின் அங்குள்ள மாணவர் எண்ணிக்கையாக இருக்க முடியாதது?

(1) 30 (2) 28 (3) 36

37.




அருகே உள்ள உருவைக் கத்தரிக்கோல் கொண்டு வெட்டிப் பெறத்தக்க அதிகூடிய முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

(1) 4 2) 8 (3) 20

38. 7ஆவது சதுர எண்ணிற்கும் 9ஆவது முக்கோண எண்ணிற்கும் இடையிலான வித்தியாசம் யாது?

(1) 4 (2) 49 (3) கூற முடியாது




**மேலுள்ள படத்தை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக?**

39. வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லக்கூடிய A,B,C ஆகிய பாதைகளில் எப் பாதை ஊடாகச் செல்லும் மாணவன் அதிக தடவை திரும்ப வேண்டும்

(1) C (2) B (3) A

40. பாடசாலையிலிருந்து வீடு செல்லும் மாணவன் ஒருவன் அதிக தடவை வலது பக்கம் திரும்பிச் செல்ல வேண்டிய பாதை எது?

(1) பாதை A (2) பாதை B (3) பாதை C